S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208
உள்ளாட்சி அரசு
தினசரி தமிழ் காலை நாளிதழ்
"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்
youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE திங்கள் டிசம்பர் 01 * 2025 * மலர் -1 * இதழ்-183* VOL-1 * ISSUE-183 விலை ரூ.3 * பக்கம் -4

## கடலோர மாவட்டங்களில் தொடர் மழை:

# நாகையில் அதிகபட்சமாக 30 செ.மீ. பதிவு: டித்வா புயல் நேற்று சென்னையை நெருங்கியது!

**★காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழந்தது**

**★தமிழகத்தில் பல இடங்களில் விடிய விடிய கன மழை**

**சென்னை,டிச.1**

வங்கக் கடலில் உருவான டித்வா புயல் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழந்த நிலையில் நேற்று சென்னையை நெருங்குகிறது. புயல் காரணமாக கடலோர மாவட்டங்களில் தொடர் மழை பெய்து வருகிறது. தமிழ்நாட்டில் பல இடங்களில் விடிய விடிய கன மழை கொட்டியது. அதிக பட்சமாக நாகப்பட்டினத்தில் 30 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

இலங்கை அருகே உருவான புயலுக்கு 'டித்வா' எனபெயர்சூட்டப்பட்டது. இந்த புயல் அந்த நாட்டை கடுமையாக துவசம் செய்து புரட்டிப் போட்டது. மேலும்அங்கு பலத்த மழை கொட்டியது. இதன் காரணமாக பலத்த வெள்ளப் பெருக்கும் அதனால் நிலச்சரிவுகளும் ஏற்பட்டது. அங்கு இதுவரை 160 பேர் உயிரிழந்துள்ளனர். 2.50 லட்சத்துக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த புயல் இலங்கையின் கிழக்குக் கடற்கரை வழியாக தமிழகத்தை நோக்கி வடக்கு–வடமேற்கு திசையில் நகர தொடங்கியது. இதனால் தமிழ்நாடு–புதுச்சேரி மற்றும் ஆந்திரப்பிரதேசத்தின் கடலோர பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது.தமிழ்நாட்டை பொறுத்தவரை தென் மாவட்டங்களில் சுமாரான மழை பெய்தது.

அதே நேரத்தில் ராமநாதபுரம் மற்றும் டெல்டா மாவட்டங்களான புதுக்கோட்டை,தஞ்சாவூர் மயிலாடுதுறை,நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களில் பலத்த மழை கொட்டியது.இந்த புயல் காரணமாக நேற்று காலை வரை கோடியக்கரையில் 20 செ.மீ. மற்றும் வேதராண்யத்தில் 14.5 செ.மீ., வேளாங்கண்ணியில் 10 செ.மீ. மழை பதிவானது.

டித்வா புயல் காரணமாக நேற்று இரவு முழுவதும் தமிழகத்தில் பல இடங்களில்விடியவிடியகனமழை பெய்தது. அதிகபட்சமாக நாகப்பட்டினத்தில் 30 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதையொட்டிய வடஇலங்கைகடற்பகுதியில் உருவான டித்வா புயல் வடக்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து நேற்று வடதமிழகம், புதுச்சேரி மற்றும்அதையொட்டியதெற்கு ஆந்திர கடலோர பகுதிகளுக்கு அருகே உள்ள தென் மேற்கு வங்கக் கடலில் உள்ளது. தற்போது இந்த புயல் சென்னையை நோக்கி மணிக்கு 7 கி.மீ. வேகத்தில் நெருங்கி வருகிறது. மேலும் சென்னையிலிருந்து 230 கி.மீ. தொலைவிலும், நாகப்பட்டினத்திலிருந்து 60 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

இதற்கிடையே, தென் மேற்கு வங்கக் கடலில் உருவான டிட்வா புயல் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழந்துள்ளதாக தனியார் வானிலை ஆய்வாளர் பிரதீப் ஜான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறும்போது, சென்னையை நோக்கி நகர்ந்து தெற்கு ஆந்திர கடற்கரை வழியாகச் செல்லும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், வறண்ட காற்று உருவாகி புயல் வலுவிழந்துள்ளது என தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது,

"வறண்ட காற்று மற்றும் ஈரக்காற்று முறிவு காரணமாக டித்வா புயல் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக தற்போது வலுவிழந்துள்ளது. சிவகங்கை, ராமநாதபுரம் உள்பட டெல்டாமாவட்டங்களான தஞ்சை, திருவாரூரிலும் மழை பெய்யும்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நள்ளிரவு எழிலகத்தில் செயல்பட்டு வரும் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில், எல்.ஈ.டி திரை திரை மூலம் டித்வா புயலின் நகர்வுகள் கண்காணிக்கப்படுவதையும், மழை பெய்யும் பகுதிகள் குறித்து பார்வையிட்டும் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், வருவாய் நிருவாக ஆணையர்/ கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம்.சாய்குமார் சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், பேரிடர் மேலாண்மை ஆணையர் சிஜி தாமஸ் வைத்யன், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.46.50 கோடி நிதி பங்களிப்புடன் கட்டப்பட்டு வரும் திருவெற்றியூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் அரசு தொழில் பயிற்சி நிலையத்தின் முன்னேற்றப் பணிகளை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமானபி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர் மற்றும் அலுவலர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ் தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆணையர் ஜெ. இன்னசென்ட் திவ்யா, மண்டலக் குழுத்தலைவர் தனியரசு, சிஎம்டிஏ தலைமை பொறியாளர் திருமகாவிஷ்ணு, தொழில்நுட்பக் கல்வி இயக்கக உதவி இயக்குநர் (திட்டம்) சியாமளா, செயற்பொறியாளர் துர்கா, சிஎம்டிஏ மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

## பரமத்தி வேலூரில்

# எஸ்.ஐ.ஆர். பணிகளில் குளறுபடி!

**பரமத்திவேலூர், டிச:1**

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் பகுதியைச் சேர்ந்தவர் செந்தில்நாதன். இவர் பரமத்தி வேலூர் பேரூர் தி.மு.க. துணைச்செயலாளராக உள்ளார். இவரது மனைவி தங்கம். இவர் பரமத்தி வேலூர் பேரூராட்சி கவுன்சிலராக உள்ளார். இவரது பாகம் எண்:145, வரிசை எண்:396, வார்டு எண்:14, பரமத்திவேலூர் சேடர்தெரு. இந்நிலையில் செந்தில்நாதன் தனது மனைவி தங்கத்திற்கு எஸ் .ஐ. ஆர் படிவத்தை பூர்த்தி செய்து அப்லோடு செய்த போது இவரது முகவரியின் பதிவு ஏற்கனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் பதிவாகி இருப்பதாக தள்ளுபடி செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் அதிர்ச்சி அடைந்த செந்தில்நாதன் தேர்தல் அலுவலர்களிடம் புகார் செய்துள்ளார்.



சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டாரம், வேலாசாமி செட்டியார் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொண்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 12 மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் இரா. பிருந்தாதேவி முன்னிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் வழங்கினார்.

## கொடைரோடு அருகே

# லாரி மோதி கூலித்தொழிலாளி பலி!

**நிலக்கோட்டை,டிச.1**

திண்டுக்கல் மாவட்டம் டி. வாடிப்பட்டி, அருகே உள்ளமேட்டுப்பட்டி சேர்ந்தவர்பாண்டியன் (47). இவர் கொடைரோடு அருகே உள்ள பள்ளபட்டி சிப்காட்டில் கூலி வேலை செய்து வருகிறார்.

இவரும் இவரது நண்பர் கோபாலகிருஷ்ணனும் நேற்று சிப்காட்டில் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக டோல்கேட் அருகே மோட்டார் சைக்கிள் சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த ஈச்சர் லாரி மோதி பலத்த காயமடைந்த பாண்டியன் சம்பவ இடத்திலே பரிதாபமாக இருந்தது. கோபாலகிருஷ்ணன் பலத்த காயமடைந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்து கொடைரோடு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் சவட முத்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறார். இறந்து போன பாண்டியனுக்கு மனைவி மற்றும் குழந்தைகள் உள்ளனர்.



தம்மம்பட்டிஅருகேஉள்ளசெந்தாரப்பட்டிஏரியானதுசுமார்120ஏக்கர்பரப்பளவிலானது. சேலம் மாவட்டத்தில், இரண்டாவது பெரிய ஏரிகளில் ஒன்றாக உள்ளது. தற்போது, இந்த ஏரியில்தண்ணீர்முழுவதும்நிரம்பியதைஅடுத்து,உபரிநீர்கலிங்குகள்வழியாகவெளியேறி வருகிறது.



ஈரோடு மாவட்டம், நசியனூர், பாரதி கல்வி நிலையத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சு.முத்துசாமிவழங்கினார்.அருகில்வி.சி.சந்திரகுமார்எம்.எல்.ஏ.,துணைமேயர்செல்வராஜ் உள்பட பலர் உள்ளனர்.

## இருமல் மருந்து கடத்தல் விவகாரம்:

# மேலும் 12 நிறுவனம் மீது வழக்கு!

**வாரணாசி, டிச.1–**

உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் கோடெய்ன் மூலப்பொருளை அடிப்படையாகக் கொண்ட இருமல் மருந்து கடத்தப்படுவதாக புகார் எழுந்தது.

இதன் அடிப்படையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு (எப்எஸ்டிஏ), 26 மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மீது கடந்த 15ம் தேதி வழக்குப் பதிவு செய்தது. அப்போது மேலும் 12 நிறுவனங்கள் மீது சந்தேகம் எழுந்தது.

இதையடுத்து, அந்த 12 நிறுவனங்களில்சோதனை நடத்த அதிகாரிகள் சென்றனர். ஆனால் அந்த நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன அல்லது அந்த முகவரியில் வேறு நிறுவனங்கள் செயல்பட்டன. இதையடுத்து அந்த 12 நிறுவனங்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. ஆனால் பதில் வராத காரணத்தால், அந்த நிறுவனங்கள் மீது நேற்று முன்தினம் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஒரப்பம், எலத்தகிரி உள்ளிட்ட பகுதிகளில் ரூ.25.5 லட்சம் மதிப்பில் புதிய சாலை பணிகளுக்கு பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார். அருகில் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் கல்லல் அருகே உள்ள ஒரு கிராமத்தில் கண்மாய் நீர்வரத்து ஏற்பட்டு நிரம்பியுள்ளது.



## நீலகிரி மாவட்டம்

# குன்னூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் நல் உள்ளம் அறக்கட்டளையின் சார்பாக முப்பது விழா!

குன்னூர் டிச.01

இந்நிகழ்ச்சியில் நல் உள்ளம் அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் டாக்டர் உலிக்கல் சண்முகம் தலைமையில் மாணவர்களுக்கு டிரக் சூட் நோட் புக் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நிறுவனத் தலைவர் டாக்டர் உலிக்கல்சண்முக தலைமை தாங்கினார். வந்தவர்களை ஆசிரியர் சங்கர் கணேஷ் வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்கள் குன்னூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுனிதா நேரு,பகிர்வோம் பற நலம் பெறுவோம் அறக்கட்டளை நீலகிரி மாவட்ட நிர்வாகி கிருஷ்ணகுமார்.சமூக ஆர்வலர் கோவர்த்தனன் ராமசாமி ,|முன்னாள் ஆசிரியர் இராஜகோபாலன்,தானம் அறக்கட்டளை தலைவர் ஹன்குமார்கலந்து கொண்டனர்.

நல் உள்ளம் அறக்கட்டளை நிர்வாக உறுப்பினர்கள் செல்வி சண்முகம், அனிதா,புதிய புயல் ஆசிரியர் ஆறுமுகம். வினோத் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் வந்தவர்கள் கிருஷ்ணகுமார், சுனிதா நேரு, கோவர்த்தனன் ராமசாமி,ஆசிரியர் இராசகோபால் வாழ்த்துரை வழங்கினர் .

நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு நல் உள்ளம் அறக்கட்டளையின் சார்பாக ட்ராக் சூட்மற்றும் பகிர்வோம் பல நலம் பேணுவோம் அறக்கட்டளை சார்பாக மாவட்ட நிர்வாகி கிருஷ்ணகுமார் தலைமையில் மாணவர்கள் புத்தகம் வழங்கப்பட்டது .

நிகழ்ச்சியில் சுனிதா நேரு,கிருஷ்ணகுமார் கோவர்த்தனன் ஆசிரியர் இராசகோபால்,ஹேன் குமார் மாணவர்களுக்கு நல்ல கருத்துக்களையும் எதிர்காலத்தில் திட்டங்களை பற்றியும் விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும் சமூக சேவை செய்பவர்கள் இப்பள்ளியை கவனம் செலுத்தி மாணவர்கள் ஊக்கப்படுத்தி ஆலோசனைகள் கருத்துக்கள் பல்வேறு ஆலோசனைகளும் தனியார் பள்ளிக்கு நிகராக கல்வியிலும்,மற்ற துறைகளும் சாதனை படைக்கவும் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர் ள்,மாணவர்கள்கலந்து கொண்டனர். கலை ஆசிரியர் சிவஞானம் நன்றி கூறினார்.

## வாணியம்பாடியில்

# இருசக்கர வாகனத்தை மர்ம நபர் திருட முயற்சி!

### சி.சி.டி.வி. காட்சி வெளியாகி பரபரப்பு!!



வாணியம்பாடி டிச.01

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி கோட்டை பள்ளிவாசல் முன்பாக தொழுகைக்கு வரும் இஸ்லாமியர்கள் பள்ளிவாசல் முன்பாக தங்களுடைய இருசக்கரவாகனங்களைநிறுத்திவிட்டு பள்ளிவாசலுக்குள் செல்வது வழக்கம்.

இந்த நிலையில் தொழுகைக்கு வந்த நபர் ஒருவர் தன்னுடைய இருசக்கர வாகனத்தை பள்ளிவாசல் வெளியே நிறுத்திவிட்டு தொழுகைக்கு சென்றுள்ளார்.

தொழுகை முடிந்த பின்னர் இருசக்கர வாகனம் எடுக்க வந்த வாகனத்தின் உரிமையாளர் இருசக்கர வாகனம் திருட முயற்சித்திருப்பது தெரிய வந்து, உடனடியாக பள்ளிவாசல் சார்பில் அங்கே பொருத்தப்பட்டுள்ள சிசி டிவி பதிவு காட்சிகளை பார்த்துள்ளார்.

அதில் மர்ம நபர் ஒருவர் அக்கம் பக்கம் நோட்டமிட்டு பின்னர் இருசக்கர வாகனத்தின் மீது அமர்ந்து காலால் வாகனத்தின் ஹேண்டில் லாக் உடைக்கும் முயற்சியில் ஈடுபட்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

மேலும் மக்கள் நடமாட்டம் உள்ளதை அறிந்து இருசக்கரவாகனம் திருடி செல்வதை கைவிட்டு அங்கிருந்து கிளம்பிச் சென்றது தெரிய வந்தது. இந்நிலையில் இருசக்கர வாகனம் திருட முயற்சித்த சிசி டிவி காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

## உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா:

# திருப்பத்தூரில் 1000 பேருக்கு அன்னதானம்!

### மாணவரணி துணை அமைப்பாளர் வழங்கினார்!!



திருப்பத்தூர் டிச.01

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த பழைய பேருந்து நிலையம் அருகே மாநில இளைஞரணி செயலாளர் மற்றும் தமிழக துணை முதல் வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49 வது பிறந்த நாளை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்கு1008 மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கிய மாணவரணி இதில் தலைமை திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ் ராஜேந்திரன் சிறப்பு அழைப்பாளராக திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி. திருப்பத்தூர் சேர்மன் சங்கீதா வெங்கடேசன். துணைச் சேர்மன் ஏ ஆர் சபியுல்லா நகர மாணவரணிதுணை அமைப்பாளர் சிகே விஜய். மற்றும் சர்வேஷ் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் வடக்கு ஒன்றியம் விக்னேஷ் வடமலை குருப்ஸ் இணைந்து இன்று தமிழக துணை முதல்வரின் பிறந்த நாளை அன்னதானம் வழங்கி சிறப்பாக கொண்டாடினார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும் இந்த நிகழ்ச்சியில் நகரத் துணைச் செயலாளர் கோ. செல்வம். நகர இளைஞரணி துணை அமைப்பாளர் அரவிந்தன். C.k ரகு நகர பொறியாளர் அணி துணை அமைப்பாளர் டி ஆர் கே ரகு நகர திமுக . வீரா விளையாட்டு அணி துணை அமைப்பாளர் நகரம்.. மணிமாறன். திமுக நிர்வாகிகள் மற்றும் மாணவர் அணி மற்றும் இளைஞர் அணி இணைந்து மக்களுக்கு இணைப்புகள் கொடுத்து மட்டும் அன்னதானம் வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

## பெரியாம்பட்டியில்

# எஸ்.ஐ.ஆர்.குறித்து ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட செயலாளர் தலைமையில் நடைபெற்றது!!

தர்மபுரி டிச.01

தர்மபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் கிழக்கு ஒன்றியம் பெரியாம்பட்டி சமுதாயக் கூடத்தில் SIR குறித்து ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் தர்மபுரி மேற்கு மாவட்ட கழக



செயலாளர் முன்னாள் உயர் கல்வித்துறை அமைச்சர் பழனியப்பன் தலைமையேற்று SIR படிவங்கள் குறித்து BLA2 க்களிடம் கலந்து கொண்டு உரையாற்றினார்..

இக்கூட்டத்தில் காரிமங்கலம் கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் GVK.சரவணன் முன்னிலை வகித்தார். பாலக்கோடு தொகுதி மேற்பார்வையாளர் அரியப்பன், SIR ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் சந்திரசேகர், காரிமங்கலம்கிழக்குஒன்றியமுன்னாள்கழகசெயலாளர் அடிலம் அன்பழகன் ,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்மகேஷ்குமார்,மாவட்ட நெசவாளர்அணி அண்ணாமலை,மாவட்ட பிரதிநிதி சங்கர்,மாவட்ட மகளிர் அணி சசிகலா,ஒன்றிய துணைச் செயலாளர் சண்முகம்,ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் முத்தமிழன், மஞ்சுநாத்,BLA2 க்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தர்மபுரியில்

# தொ.மு.ச.பேரவை சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

தர்மபுரி டிச.01

தர்மபுரிமாவட்டம்தர்மபுரிபிஎஸ்என்எல்அலுவலகம் எதிரே தொ.மு.ச.பேரவை சார்பில் தொழிலாளர்



விரோதநான்குசட்டதொகுப்புகளைரத்துசெய்யக்கோரி ஒன்றியபாஜகஅரசைகண்டித்துகண்டனஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கோசங்கள் எழுப்பி இதில் ஒன்றிய பாஜக அரசே வேலை நேரத்தை உயர்த்தாதே, பாசிச பாஜக அரசு பணி பாதுகாப்பான தொழிலாளர் எண்ணிக்கை 300 ஆக உயர்த்தாதே என பல்வேறு கோஷங்கள் எழுப்பினார்கள்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில்

# டிட்வா புயலின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

### ஒலிபெருக்கி மூலம் வீதி வீதியாக விழிப்புணர்வு!!

புதுக்கோட்டை டிச.01

புதுக்கோட்டை மாவட்டத்தில் அதிக கன மழைக் காண சிவப்பு எச்சரிக்கையை வானிலை மையம் கொடுத்துள்ள நிலையி ல் பொதுமக்களுக்கு புயல் மழை வெள்ளம் பாதிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஆட்டோவில் ஒலிபெருக்கி கட்டிக் கொண்டு வீதி வீதியாக விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



வங்க கடலில் உருவாகியுள்ள டிட்வா புயலின் காரணமாக புதுக்கோட்டை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களுக்கு வானிலை ஆய்வு மையம் அதி கன மழைக் காண சிவப்பு எச்சரிக் கை விடுத்துள்ளது.

சிவப்பு எச்சரிக்கை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு விடுத்து ள்ள நிலையில் மாவட்டம் முழுவதும் வானம் மேகமூட்டத்துடன்காணப்பட்டு வரக்கூடிய நிலையில் நேற்று பிற்பகல் பள் ளி கல்லூரிகளுக்கு மாவட்ட நிர்வாகம் விடுமுறை அறிவி த்து உத்தரவிட்டுள்ளது.

மேலும் அதிக கன மழைக்கான எச்சரிக்கையைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை களையும் எடுத்து வருகிறது.

குறிப்பாக மாவட்டத்தில் 77 தாழ்வான பகுதிகளை கண்டறிந் து மழை வெ ள்ளத்தால் பாதிக்கப்பட்டால் அந்தப் பகுதி மக்க ளை அங்கி ருந்து பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல் லவும் அதே போல் மாவட்டத்தில் 433 பேரிடர் நிவாரண முகாம் களும் 9 பல் நோக்கு பாதுகாப்பு மையங்களும் அனைத்து அ டிப்படை வச திகளுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள து.

இந்நிலையில்தான் புயல் மழை வெள்ளத்தால் பொதுமக்கள்பாதிக்காமல்இருக்கஅவர்களுக்குவிழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு பகுதி களில் வீதி வீதியாக ஆட்டோக்களில் ஒலி பெருக்கி கட்டப்ப ட்டு அதன் மூலம் பல்வேறு விழிப்புணர்வுகள் பொதுமக்க ளுக்கு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/தொழிலாளர் நலத்துறை இயக்குநர் எஸ்.ஏ.இராமன்மாவட்டஆட்சித்தலைவர்ஷே.ஷேக்அப்துல்ரஹ்மான்,தலைமையில்நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ப.சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் கி.அரிதாஸ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஜெ.இ.பத்மஜா, திண்டிவனம் சார் ஆட்சியர் அ.ல.ஆகாஷ், உட்பட பலர் உள்ளனர்.



சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிகளை சிறப்புடன் மேற்கொண்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சால்வை அணிவித்து, கேடயங்களை வழங்கினார். இந்நிகழ்வில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் இணை ஆணையர் (கல்வி) க.கற்பகம் மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) நா. பூஷ்ணா தேவி, வாக்குச்சாவடி நிலை மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.



சென்னை மாவட்டம், எழும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புளியந்தோப்பு, சிவராஜபுரம் 1வது தெருவில் வீடு தேடி வருகை தந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டுப் படிவத்தினை வாக்காளர்கள் வழங்கினர்.

## போச்சம்பள்ளி அருகே

# இருசக்கர வாகனங்கள் மீது கார் மோதி சிறுவன் பலி!

### 4 பேர் படுகாயம்!!

கிருஷ்ணகிரிடிச.01



கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த கோணனூர் கிராமத்தில் காவேரிப்பட்டிணம் சாலையில் அதிவேகமாக காவேரிப்பட்டினம் சென்ற சிவப்பு நிற கார் எதிரே வந்த 2 இரு சக்கர வாகனங்கள் மீது மோதியது. இதில் இரு சக்கர வாகனத்தில் வந்த அகரம் அடுத்த சுண்டகாபட்டி கிராமத்தை சேர்ந்த சின்னையான் (37), மனைவி புவனேஸ்வரி (35) மற்றும் அவர்களது மகன் கோகுல் (12) மற்றும் மற்றொரு இரு சக்கர வாகனத்தில் வந்த சின்னகரடியூர் கிராமத்தை சேர்ந்த காளியப்பன் (52) ஆகிய நான்கு பேரும் கார் மோதியதில் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தனர். எதிரே காரில் வந்த அடையாளம் தெரியாத நபர் ஓட்டி வந்த கார் திடீரென கட்டுப்பாட்டை இழந்து இரு சக்கர வாகனங்கள் மீது அடுத்தடுத்து மோதியது.

இதனை அங்கிருந்தவர்கள் மீட்டு போச்சம்பள்ளி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

பின்பு அங்கிருந்து மேல் சிகிச்சையாக தர்மபுரி தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் 12 வயது பள்ளி சிறுவன் கோகுல் மருத்துவமனையில் திவீர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் தற்பொழுது சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். இச்சம்பவம் இப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



வாணியம்பாடி வளையாம்பட்டு டாஸ்மாக் கடை அகற்றிட2 வது நாளாக கிராம மக்கள், விடுதலை சிறுத்தைகள், நாம் தமிழர் உள்ளிட்ட கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

## புதுக்கோட்டை திமுக மாவட்ட அயலக அணி சார்பில் மாநில அளவிலான பெண்கள் பங்கேற்கும் மின்னொளி கபடி போட்டி!

### அமைச்சர் மெய்ய நாதன் துவக்கி வைத்து பரிசுகளை வழங்கினார் !!



புதுக்கோட்டை,டிச.1–

புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட சேங்கை தோப்புமைதானத்தில்துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை 41வது வட்ட திமுக சார்பில் மாவட்ட அயலக அணிதுணை அமைப்பாளர் செந்தில்குமார் ஏற்பாட்டில்மாநில அளவிலான பெண்கள் பங்கேற்கும் மின்னொளி கபடி போட்டி நடைபெற்றது இந்த கபடி போட்டியில் 16க்கும் மேற்பட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்துஅணிகள்பங்கேற்றனர் இந்த கபடி போட்டியை பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்சிவவீமெய்யநாதன் துவக்கி வைத்து பரிசுகள் வழங்கினார். விழா மேடையில் பெரியார் அண்ணா கலைஞர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தின் மறைந்த திமுக முன்னோடிகளின் புகைப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தார். தமிழ்நாடு முழுவதும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திமுக சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது அதன் ஒரு பகுதியாக இன்று புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட சேங்கை தோப்பு மைதானத்தில் 41 வது வட்ட திமுக சார்பில் மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் செந்தில்குமார் ஏற்பாட்டில் மாநில அளவிலான கபடி போட்டி நடைபெற்றது இந்த கபடி போட்டியில் புதுக்கோட்டை திருச்சி சேலம் கும்பகோணம் ஈரோடு திருநெல்வேலி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து 16க்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்றனர் இந்த மாநில அளவிலான கபடி போட்டியை தமிழ்நாடு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் மெய்ய நாதன் கலந்துகொண்டுவிளையாட்டு வீரர்களுக்கு கை கொடுத்து போட்டியை துவக்கிவைத்தார் மேலும் இந்த போட்டியில் வெற்றி பெற்ற ஒட்டன்சத்திரம் அணிகளுக்கு முதல் பரிசாக ஒருலட்சரூபாயும்இரண்டாவது பரிசாக 70 ஆயிரம் ரூபாய் சென்னை அணிக்கும் மூன்றாவது பரிசாக 40 ஆயிரம் அரியலூர் அணைக்கு நான்காவது பரிசு ரூபாய் 40 ஆயிரம் திருவண்ணாமலை அணிக்கும்சுழல்கோப்பையும் வழங்கினார். இந்நிகழ்வில் புதுக்கோட்டை எம்எல்ஏ வை முத்துராஜா மாவட்டச் செயலாளர் செல்லப் பாண்டியன் மாநகர மேயர் திலகவதி செந்தில் மாநகரச் செயலாளர் வே. ராஜேஷ் மாமன்ற உறுப்பினர்கள் சுப சரவணன் கவிவேந்தன், அரசு வழக்கறிஞர் பூங்குடிசிவா அஞ்சான் சரத் .41 வதுவார்டுவட்டச் செயலாளர் முத்து கருப்பன் ஆகியோர் கலந்துகொண்டனர். உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்க்காக மின்னொளி கபடி போட்டியில் மைதானத்தைச் சுற்றி பார்வையாளர் மேடை அமைக்கப்பட்டிருந்ததால் கொட்டும் பணியிலும் நூற்றுக்கு மேற்பட்ட பொது மக்கள் கபடி போட்டியை கைதட்டி ரசித்து மகிழ்ந்தனர்

## வத்திராயிருப்பில் காவலர்களை ஏமாற்றி தப்பி ஓடிய குற்றவாளி!



வத்திராயிருப்பு, டிச.1

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே புகையிலை பொருட்கள் விற்பனைசெய்துபோலீசாரிடம் பிடிபட்ட குற்றவாளி சிறைக்கு கொண்டுபோகும்போது தப்பி ஓடியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது பற்றிய விபரமாவதுவிருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பை சேர்ந்தவர் செல்வம். இவர் தடை செய்யப்பட்ட பான்பராக், குட்கா, புகையிலை பொருட்களை விற்பனை செய்தது தெரியவந்தது இதையடுத்து வத்திராயிருப்பு போலீசார் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். நேற்று முன்தினம் நீதிமன்ற விசாரணைக்காக அவரை போலீசார் சிறையில் இருந்து அழைத்து ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றனர். நீதிமன்ற விசாரணைக்கு பின் அவரை மீண்டும் விருதுநகரில் உள்ள சிறைச்சாலைக்கு போலீசார் டூவீலரில் அழைத்துச் சென்றனர். அப்போது அழகாபுரி அருகே செல்வம் சிறுநீர் கழிப்பதற்காக தன்னை இறக்கி விடுமாறு கூறினார். அதனை ஏற்று உடன் சென்ற போலீசார் அவரை ஒதுக்குப்புறமான இடத்தில் இறக்கிவிட்டு தாங்களும் சிறுநீர் கழித்துக் கொண்டிருந்தனர். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி செல்வம் அங்கிருந்த முள் செடி கொடிகளுக்குள் சென்று தப்பி தலைமறைவானார். இதனையடுத்து நத்தம்பட்டி, அழகாபுரி செக்போஸ்டில் இருந்த காவலர்கள் அழைக்கப்பட்டு அப்பகுதி முழுவதும் குற்றவாளியை தேடினர் ஆனால் அவர் பிடிபடவில்லை. இதையடுத்து வத்திராயிருப்பு, கூமாபட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர் உட்பட பல்வேறு காவல் நிலையங்களுக்கும் தகவல் தரப்பட்டு அனைத்து வாகனங்களும் சோதனைசெய்துதேடப்பட்டது. ஆனாலும் குற்றவாளி சிக்கவில்லை. தொடர்ந்து தேடி வருகின்றனர். குற்றவாளிதப்பியோடியசம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தமிழகத்தில் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் கூடுதல் தொகுதிகளை கோர உள்ளோம்!

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் மு.வீரபாண்டியன் பேட்டி!!




விழுப்புரம்,டிச.1–

தமிழகத்தில் 2026 சட்டப் பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் கூடுதல் தொகுதிகளை கோர உள்ளதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் மு.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார். விழுப்புரத்தில் நடைபெற்ற பேட்டியில் அவர் கூறியதாவது:டித்வா புயல் காரணமாக அதிக மழை ஏற்படும் நிலையில், மாநில அரசு நிவாரணப் பணிக்குத் தயாராக இருப்பதை அவர் வரவேற்றார். இயற்கை சீற்ற காலங்களில் தனித்தோடு அல்லது அரசுடன் இணைந்து மீட்புப் பணிகளில் கலந்து கொள்ள கட்சியினர் முடிவு செய்துள்ளதாக தெரிவித்தார். வாக்காளர் பட்டியல் திருத்தப்பணியை தள்ளி வைக்க வேண்டும் என்ற அரசியல் கட்சிகளின் கோரிக்கையை தேர்தல் ஆணையம் புறக்கணித்ததை அவர் கண்டித்தார். மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி வழங்காதது, தமிழகத்தை ஒதுக்கிவைக்கும் நடவடிக்கையென கூறினார். டெல்டா மாவட்ட குறுவைப் பயிர்களுக்கான மத்திய குழு ஆய்வுக்கு வந்தும் நிதி வழங்காமல் கண்டனம் பெற வேண்டியதாகிறது என்றும் தமிழகத்துக்கு உடனடி நிதி வழங்க வேண்டும் என்றார்.அயோத்தி ராமர் கோவிலில் பிரதமர் மோடியின் உரை மதச்சார்பின்மைக்கு முரணானது எனவும் ஆளுநர் அரசியல் விமர்சனங்களில் ஈடுபடுவது சட்டப்பூர்வமற்றது எனவும் அவர் குற்றம்சாட்டினார்.புதிய கட்சிகளின் கூட்டம், இணைவுகள் மூலம் அரசியல் மாற்றம் வராது; திமுக கூட்டணியை மக்கள் ஆதரிப்பதாகவும், பாஜக வடமாநில பிளவு வாதத்தை தமிழக மக்கள் ஏற்கமாட்டார்கள் என்றும் வீரபாண்டியன் தெரிவித்தார். விஜய் உள்ளிட்ட யார் வந்தாலும் திமுக கூட்டணி வெற்றி பெறும்; இரட்டை ஆட்சியை எதிர்த்து திமுகவுடன் இணைந்து செயல்படுகிறோம் என்றும் அவர் கூறினார். பேட்டியில் மாவட்ட செயலர் ஆ.சௌரிராஜன் ,ஒழுங்கு முறை விற்பனை கூடஎடைப்பணிதொழிலாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் ஏ.வி சரவணன்,தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஆர். கலியமூர்த்தி, மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் இயங்கி வரும் பிரபல ஆங்கிலப் பள்ளியின் 46 ஆவது ஆண்டு விழா மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு நிதி திரட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஸ்ரீ. ஜூட்ஸ் பள்ளி மாணவ, மாணவிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஒன்றிணைந்து இளையராஜாவின் இசையை தத்ருபமாக இசைத்தனர். இசை மழையில் மெய்சிலிர்த்து பெற்றோர்கள் தங்களை மறந்து, பள்ளி மாணவ மாணவிகள் இசைத்த இசையை கண்டு ரசித்தனர் .இதேபோல் பள்ளி மாணவ மாணவிகள் பிரம்மாண்ட மேடையில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு நிதி திரட்டும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும் நடத்தினர்.



மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான கமல் ஹாசனை,பரமக்குடி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் செ.முருகேசன் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார். பரமக்குடி சட்டமன்றத் தொகுதியின் வளர்ச்சிப்பணிகள் குறித்து இருவரும் கலந்தாலோசித்தனர்.இந்தச் சந்திப்பின்போது மக்கள் நீதி மய்யம் கட்சியின் பொதுச் செயலாளர் ஆ.அருணாச்சலம் உடனிருந்தார்.

### கடலூரில் அடுத்த ஆண்டு நடைபெறும்

## தேமுதிக 2.0 மாநாட்டிற்கு மக்கள் பெருந்திரளாக பங்கேற்க வேண்டும்!

### பிரேமலதா விஜயகாந்த் கோரிக்கை !!



திருப்பூர்,டிச.1

திருப்பூரில் உள்ள ஹார்வி குமாரசாமி கல்யாண மண்டபத்தில் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் திருப்பூர் வடக்கு தெற்கு காங்கேயம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பூத் முகவர்களுடன் நேரடி சந்திப்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது இந்த கூட்டத்திற்கு மாநகர மாவட்ட செயலாளர் பி ஆர் குழந்தைவேல் தலைமை தாங்கினார் இதில் கழகப் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார் அப்போது பேசிய அவர் அடுத்த ஆண்டு நடைபெறும் சட்டமன்றத் தேர்தல் கூட்டணி ஆட்சிதான் நடைபெறும் திருப்பூர் மாநகராட்சி முழுவதும் குப்பைகள் அல்லாமல் துர்நாற்றம் வீசுவதாகவும் தார் சாலைகள் மாநகர் முழுவதும் தரமான சாலை இல்லை எனவும் குடிதண்ணீர் சரியாக வரவில்லை எனவும் சரமாரி குற்றச்சாட்டை முன் வைத்தார் மேலும் தேமுதிக துவங்கிய முதல் மாநாடு மதுரை மாநகர் எப்படி குலுங்கியோதோ அதேபோல் கடலூரில் நடைபெறும் 2.0 மாநாடு பல லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்க இருப்பதாகவும் தேசிய முற்போக்கு திராவிட கழகம் 20 ஆண்டு நினைவு செய்து 21 வது ஆண்டு துவக்க விழா மாநாடு மாபெரும் வெற்றி பெற ஒற்றுமையோடு செயல்பட வேண்டும் என தெரிவித்தார் இந்த நிகழ்வில் கழகப் பொருளாளர் எல் கே சுதீஷ். மேற்கு மண்டல தேர்தல் பொறுப்பாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மோகன்ராஜ். மேற்கு மண்டல தேர்தல் துணை பொறுப்பாளர் கணேசன் திருப்பூர் மாநகர் மாவட்ட தேர்தல் பொறுப்பாளர் முருகராஜ்.கோவை தெற்கு மாவட்ட தேர்தல் பொறுப்பாளர் ஆனந்த். உள்ளிட்ட மாவட்ட மாநகர பகுதி ஒன்றிய நகர நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

## வேலூர் ஹாக்கி வீரர்கள் சென்னைக்கு பயணம்!



வேலூர், டிச.1

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து நவம்பர் 28ஆம் தேதி சென்னையில் தொடங்கும் உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியினை காண்பதற்காக வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 55 ஹாக்கி வீரர்கள் மற்றும் 55 வீராங்கனைகள் பேருந்துகள் மூலம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதனை வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி கொடியசைத்து தொடங்கி வைத்தார். பின்னர் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு வாழ்த்துகளையும் அப்போது மாவட்ட ஆட்சியர் தெரிவித்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



மதுரை மாவட்டம் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், முதலைக்குளம் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பாக தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை தொடர்பான சிறு புகைப்பட கண்காட்சி நடைபெற்றது கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் அரசின் நலத்திட்ட செய்திகளை கண்டு களித்து மகிழ்ந்தனர்.

## சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற கூட்டம்!

வத்தலகுண்டு,டிச.1

சேவுகம்பட்டி பேரூராட்சியில் மாதாந்திர கவுன்சிலர்கள் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு பேரூராட்சி மன்ற தலைவர் வனிதாதங்கராஜன் தலைமை தாங்கினார்.துணைத் தலைவர் தெய்வராணிவிஜி முன்னிலை வகித்தார். செயல் அலுவலர் ரமேஷ்பாபு வரவேற்றார். கூட்டத்தில் சேவகம் பட்டி பேரூராட்சியில் அனைத்து வார்டுகளிலும் ஏரியா சபா நடத்தப்பட்டு சாதிப்பெயரில் உள்ள திருக்கல் குடியிருப்புகள் சாலைகள் நீர் நிலைகள் மாற்றம் செய்ய முடிவெடுக்கப்பட்டு பொதுமக்கள் ஆட்சபணைக்காக வெளியிடப்பட்டது. அம்மின் இணைப்புகளுக்கு குறைந்தபட்ச மின் கட்டணம் மாதம்தோறும் செலுத்த வேண்டி உள்ளதால் அம்மின் இணைப்புகளை துண்டிப்பு செய்ய தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தினை கேட்டுக்கொள்ள மன்றம் அங்கீகரிக்க. அக்டோபர் 2025ம் மாதத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு மேற்கொள்ளப்பட்ட சில வீட்டுகள் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், யாக்கை தனியார் அமைப்பின் சார்பில், நீலமலைத் தொல்லியல் என்ற நூலினை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றுத்துறை, தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் இன்று வெளியிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு உட்பட பலர் உள்ளனர்.



## ஓசூரில் மாநில அளவிலான அரசு பள்ளி மாணவர்கள் பங்கேற்ற கலை திருவிழாவில் 2308 மாணவர்கள் பங்கேற்று அசத்தல்!

ஓசூர்,டிச.1

தமிழக அரசு பள்ளி கல்வித்துறை சார்பில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவர்களின் கலைத்திறனை வெளிப்படுத்தும் வகையிலும் அவற்றை ஊக்கப்படுத்தும் விதமாகவும் ஆண்டுதோறும் கலைத்திருவிழா நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு கடந்த இரண்டு மாதங்களாக தமிழகம் முழுவதும் அரசு பள்ளிகளில் கலை திருவிழா நடைபெற்றது.இந்த விழாவின் இறுதிபோட்டிகள்கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள தனியாருக்கு சொந்தமான அதியமான் பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது.

தமிழகம் முழுவதும் 38 மாவட்டங்களில் இருந்து மாவட்ட அளவில் நடந்த போட்டியில் தேர்வு செய்யப்பட்ட ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர் மாணவர்கள் 2308 பேர் இறுதி போட்டியில் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார் தலைமை வகித்து குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ், மாநகராட்சி மேயர் சத்யா, பள்ளிக்கல்வி துறை இணை இயக்குநர் வைகுமார், முதன்மை கல்வி அலுவலர் மதன் குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த கலைத்திருவிழாபோட்டிகளில் நாட்டுப்புற பாடல், செவ்வியல் இசை, வில்லுப்பாட்டு, கிராமிய நடனம், பரதநாட்டியம், தனி நபர் நடிப்பு, பாவனை நடிப்பு, பல குரல் பேச்சு, போன்ற தலைப்புகளின் கீழ் மாணவர்கள் தங்களது திறமைகளை வெளிப் படுத்தினர். தொடர்ந்து, நடை பெற்ற போட்டிகளில் மாணவர்களின் திறமைகள் சிறந்த நடனங்களை நடுவர்கள் தேர்வு செய்தனர். சிறந்த நடன குழு மற்றும் மாணவர்களின் தனி திறமைகளை தேர்வு செய்து மாநில அளவில் வெற்றி பெற்ற அணிகள் அறிவிக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.இந்த கலை திருவிழா நிகழ்ச்சியில் மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் என சுமார் 4000 மேற்பட்டோர் கண்டு மகிழ்ந்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கிருஷ்ணகிரி மாவட்ட பள்ளி கல்வித்துறை அலுவலர்கள் செய்திருந்தனர்.




## சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக அம்பேத்கர் இருக்கையின் சார்பில் நடைபெற்றது!

சிதம்பரம், டிச.1

அரசியலமைப்பு தின விழா பல்கலைக்கழக மைய நூலகத்தில் அம்பேத்கர் இருக்கையின் சார்பில் நடைபெற்றது. நிகழ்ச்சியில்பங்கேற்ற அனைவரும் அரசியலமைப்பு சட்டஉறுதி மொழி ஏற்றுக் கொண்டனர். நிகழ்ச்சியில் அம்பேத்கர் இருக்கையில் உதவிபேராசிரியைராதிகாராணிவரவேற்புரை ஆற்றினார் அண்ணாமலை பல்கலைக்கழகதுணைவேந்தர் ஒருங்கிணைப்புகுழு உறுப்பினர் அறிவுரை நம்பி முதன்மை உறை ஆற்றினார். அவரின்உரையில் இந்திய அரசியலமைப்பு சட்டம் என்பது உலக அளவில் தனித்துவம் வாய்ந்தது என்று எடுத்துரைத்தார். மொழியியல் புல முதல்வர் அரங்கபாரி வாழ்த்துரை வழங்கினார் .சிறப்பு விருந்தினராக அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக பேராசிரியர் கேப்டன் ஜெய் சங்கர் மற்றும் பேராசிரியர் லட்சுமணன் (மெட்ராஸ் இன்ஸ்டியூட் ஆப் டெவலப் மென்ட் ஸ்டடிஸ்) ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியின் சிறப்பு அம்சமாக

சென்னை சட்டபல் கலைக் கழகஇறுதிஆண்டு மாணவர்கள் சட்ட கட்டமைப்பின் மாதிரி சட்ட வரை முறை எப்படிநடந்தது என்பதை நிகழ்ச்சியாக நடித்துக் காட்டினார்கள். சிதம்பரம் ராணி சீதை ஆச்சி பள்ளி மற்றும் அரசு நந்தனார் பெண்கள்மேல்நிலைப்பள்ளி மாணவமாணவியர்பங்குபெற்றனர்.முடிவில் இருக்கையில் பேராசிரியர்க.சௌந்தரராஜன் நன்றி கூறி னார். விழாவில் அண்ணாமலை பல்கலைக் கழக பல்வேறு துறை புல முதல்வர்கள், துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். விழா விற்கான ஏற்பாடுகளை அம்பேத்கர் இருக்கையின் ஒருங்கிணைப்பாளர்கள் சௌந்தரராஜன் மற்றும் ராதிகாராணி செய்திருந்தனர்



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி ஆதர்ஷ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாரா என்ற மாணவி குஜராத் ரிங் டென்னிஸ் சங்கம் சார்பில் நடைபெற்ற ஜூனியர் தேசிய ரிங் டென்னிஸ் மகளிர் அணி பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.குஜராத் ரிங் டென்னிஸ் சங்கம் சார்பில் நடத்தப்பட்ட 1வது ஜூனியர் தேசிய ரிங் டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2025 போட்டிகள் கடந்த 21 முதல் 23 வரை தேதி வரை குஜராத் மாநிலம் பனஸ்கந்தா மாவட்டத்தில் உள்ள கௌடில்யா வித்யாபீடத்தில் நடைபெற்றது.இப் போட்டியில், வாணியம்பாடி ஆதர்ஷ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவி தாரா பங்கேற்றார். இவர் மகளிர் அணி பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.சாதனை படைத்த மாணவியை பள்ளித் தாளாளர் டாக்டர் செந்தில் குமார், பள்ளித் தாளாளரின் செயலாளர் ஷபானா பேகம், பள்ளி நிர்வாக முதல்வர் சத்தியகலா, உடற்கல்வி ஆசிரியர் ராம் குமார் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர்.



திமுக கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் மா.சந்திரசேகரன் அவர்கள் நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்து மகிழ்ந்தார்.



விழுப்புரம் நகராட்சியில் உள்ள அரசு காமராஜர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட முகாம்களில் தங்கவைக்கப்படவுள்ள பொதுமக்களுக்கு உணவு தயாரிக்கும் இடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் விழுப்புரம் நகராட்சி ஆணையர் எம்.ஆர். வசந்தி, விழுப்புரம் நகராட்சி பொறியாளர் புவனேஸ்வரி, விழுப்புரம் நகர் நல அலுவலர் மரு.ஸ்ரீ பிரியா உட்பட பலர் உள்ளனர்.

### உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா:

## தருமபுரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் நலத்திட்ட உதவிகள்!



தர்மபுரி டிச.01

தர்மபுரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பில் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா தருமபுரி மாவட்ட துணைச் செயலாளர் ரேணுகா தேவி ஏற்பாட்டில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஆ.மணி MP தலைமையில் மாவட்ட கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது .

தருமபுரி கிழக்கு மாவட்ட மகளிரணி ,தொண்டரணி சேர்ந்த மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட துணை ஒன்றிய, நகர, பேரூர் மகளிரணி நிர்வாகிகள் கேக் வெட்டி கொண்டாடினர். இதனைத் தொடர்ந்து அனைத்து மகளிரணி நிர்வாகிகளுக்கும் இனிப்புகள் மற்றும் புடவைகளை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி வழங்கினர்.

இந்த நிகழ்வில் மாவட்ட பொருளாளர் தங்கமணி , தருமபுரி கிழக்கு மற்றும் மேற்கு நகர பொறுப்பாளர் நாட்டான் மாது, கௌதம், ஒன்றிய செயலாளர்கள் காவேரி, சண்முகம் ,பெரியண்ணன், வீரமணி,செல்வராஜ், பச்சையப்பன், பிரகாஷ், கந்தையன், தருமபுரி நகர மன்ற தலைவர் லட்சுமி மாது, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் முத்துலட்சுமி, கவிதா மோகன்தாஸ், கலைவாணி, பத்மா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மகளிரணி மாவட்ட நிர்வாகிகள் மேகலா, சோனியா, லிங்கம்மாள், சித்ரா, சாந்தரூபிணி, குமுதா, கலைவாணி, அனந்தலட்சுமி, நகர அமைப்பாளர் முத்தியம்மாள், தகவல் தொழில்நுட்ப அணி யாஸ்மின், அம்பிகா கோமதி, ராதிகா, சந்தியா மற்றும் ஒன்றிய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை அருகே

## அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் வானவில் மன்றம் ;4ம் ஆண்டு தொடக்கம்!

புதுக்கோட்டை,டிச.01

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வ கோட்டைஅருகே அக்கச்சி பட்டி நடுநிலைப் பள்ளியில் வானவில் மன்றத்தின் நான்காம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கு நவம்பர் மாதத்திற்கான தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாதம் தோறும் வெளியிட்டு வரும் துளிர் மாத இதழ் வழங்கப்ப ட்டது. வானவில் மன்றத்தின் சார்பில் 6 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு மாதம் தோறும் வானவில் மன்ற கருத்தாளர்கள் மூலம் அறிவியல் மற்றும் கணித சார்ந்து செய்முறை விளக்கம் மூலம் சோதனைகள் செய்து காண்பிக்கப்பட்டது.

வானவில் மன்றத்தின் மூலம் மாணவர்களுக்கு அறிவியல் மனப்பான்மையை மேம்படுத்தப்பட்டு வருகிறது. வானவில் மன்றத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு அதில் மாணவ, மாணவிகள் ஆய்வு கட்டுரை சமர்ப்பித்த ஆய்வு கட்டுரைகளில் சிறந்த ஆய்வு கட்டுரைகள் ஒன்றிய அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகளை உருவாக்கிறது. அதன்படி இந்த ஆண்டு கந்தர்வ கோட்டை ஒன்றிய அளவில் நடைபெற்ற வானவில் மன்ற போட்டியில் அக்கச்சிப்பட்டியில் நீர் மேலாண்மை என்ற தலைப்பில் மாணவர்கள் முகேஷ், சிவகார்த்திகேயன், கோகுல சிவஸ்ரீ உள்ளிட்ட குழுவினர் ஆய்வு கட்டுரை சமர்ப்பித்தனர்.

உடல் நலத்திற்கு சிறுதானியங்களின் பங்கு என்ற தலைப் பில் ரிதன்யா மாறன், ஜெயஸ்ரீ, ரகுனா குழுவினர் சமர்ப்பித்த ஆய்வு கட்டுரை ஒன்றிய அளவில் தேர்வு செய்யப்பட்டு மாவ ட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்கின்றனர்.அரசுப் பள்ளி மாணவர்களிடையே அறிவியல் மனப்பான்மை யை வளர்க்கவும், எதையும் ஆராய்ந்து பார்த்து கேள்வி கேட் கும் பழக்கத்தை உருவாக்கவும், அறிவியல் மற்றும் கணிதம் தொடர்பாக, புதியவற்றை அறிந்து கொள்ளும் எல்லையி ல்லா ஆர்வத்தை உண்டாக்கவும் 'வானவில் மன்றம்' திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

## தாமிரபரணி ஆற்றுப்பாலத்தில் தூத்துக்குடி ஆட்சியர் ஆய்வு!

தூத்துக்குடி டிச.01

தூத்துக்குடி மாவட்டத்தில் கனமழை பெய்து வரும் நிலையில் ஏரல் பாலம் மற்றும் தாமிரபரணி ஆற்றின் வழியாக செல்லும் தண்ணீரை மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் பார்வையிட்டார்.

வங்கக்கடலில் உருவாகியுள்ள டித்வா புயல் காரணமாக நாளை தூத்துக்குடி மாவட்டத்தில் கடுமையான மழை பொழிவு ஏற்படக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், நேற்று ஏரல் பாலம் மற்றும் தாமிரபரணி ஆற்றின் வழியாக செல்லும் தண்ணீரை பார்வையிட்டார்.

## கோவில்பட்டியில் புத்தாக்க அறிவியல் போட்டி!

கோவில்பட்டி டிச.01

கோவில்பட்டியில் புத்தாக்க அறிவியல் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு அமைச்சர் கோவி.செழியன் பரிசுகளை வழங்கினார்.

கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரியில் இன்று (நவ 29 ) நடைபெற்ற மாநில அளவிலான புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் பரிசளிப்பு விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் ,போட்டிகளில் மாவட்ட அளவில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ மற்றும் மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

### திருச்செந்தூர்

## படகில் சென்று அறுவடை செய்த விவசாயிகள்!

திருச்செந்தூர் டிச.01

வயல்களை வெள்ளம் சூழ்ந்ததால் விவசாயிகள் படகில்சென்றுவாழைத்தார்களைஅறுவடைசெய்தனர். திருச்செந்தூர் அருகேயுள்ள செம்மறிகுளம் கஸ்பா பகுதிக்கு அதிக அளவு தண்ணீர் வந்ததால், அருகே உள்ள வாழைத் தோட்டங்களுக்குள் வெள்ளம் புகுந்தது.

சுமார் 50 ஆயிரம் வாழைகள் மழை வெள்ளத்தால் சூழப்பட்டன. இவை அறுவடைக்கு தயாராக இருந்தவை. மழைநீர் தேங்கி வாழைத்தார்கள் சேதமடையும் நிலை ஏற்பட்டதால், அவற்றை உடனடியாக அறுவடை செய்ய வேண்டிய கட்டாயம் விவசாயிகளுக்கு ஏற்பட்டது.இதையடுத்து, மீனவர்களிடம் படகை வாடகைக்கு வாங்கி வந்து சுமார் 300 மீட்டர் தொலைவுக்கு சூழ்ந்திருந்த வெள்ளத்தைக் கடந்து வாழைத்தோட்டங்களுக்குச் சென்று வாழைத்தார்களைஅறுவடை செய்து, படகில் வெளியே கொண்டு வந்தனர்.பின்னர் லாரிகள் மூலம் வெளி மாநிலங்களுக்கு வாழைத்தார்களை அனுப்பி வைக்கப்பட்டன.

## தூத்துக்குடி துறைமுகத்தில் முதல் கிளிங்கர் கப்பலுக்கு வரவேற்பு!

தூத்துக்குடி டிச.01

தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தில் அம்புஜா சிமெண்ட் நிறுவனத்துடன் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் வருகை தந்த முதல் கிளிங்கர் கப்பலுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகம்; 19.11.2025 அன்று குஜராத்தைச் சேர்ந்த அம்புஜா சிமெண்ட் லிமிடெட்டுடன் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி, முதல் கிளிங்கர் சரக்கை பெற்றுள்ளது. குறைந்தபட்ச உத்தரவாத சரக்கு திட்டத்தின்படி அமைந்துள்ள இந்த ஒப்பந்தத்தில், வருடத்திற்கு 2,50,000 மெட்ரிக் டன் கிளிங்கர் உள்நாட்டு சரக்கு போக்குவரத்தின் மூலம் கொண்டுவரப்படும் என்று உறுதி வழங்கப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, 24.11.2025 அன்று, வடக்கு சரக்குத்தளம்2 கப்பல் தளத்தில் முதன் முதலாக Lima Trader என்ற கப்பல் மூலமாக கிளிங்கர் சரக்கு வந்தடைந்தது. குஜராத்திலுள்ள சாங்கி துறைமுகத்திலிருந்து 56,440 மெட்ரிக் டன் கிளிங்கர் இந்த கப்பல் மூலமாகக் கொண்டு வரப்பட்டது. 13.1 மீட்டர் மிதவை ஆழம் கொண்ட இந்தக் கப்பலுக்கு Seaport Logistics கப்பல் முகவராகவும், சரக்குக் கையாளுநராகவும் (ளுவநளநனமழசந) செயல்பட்டன.

இந்த கிளிங்கர் சரக்கு, துறைமுகத்திலிருந்து சுமார் 23.8 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள மேல அரசடி, பகுதியில் உள்ள அம்புஜா சிமெண்ட் நிறுவனத்தின் அரவை நிலையதிற்கு லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, சிமெண்டு உற்பத்திற்கான செயலாக்கம் மேற்கொள்ளபடுகிறது.

### "பிரிட்டானியா மில்க் பிக்கிஸ் & டேலண்ட்டட்:

## 'அடேங்கப்பா கதைகள் 2.0' – பெற்றோர் குழந்தை கதைநேரம் மீண்டும்!"



வேலூர் டிச.01

பிரிட்டானியா மில்க் பிக்கிஸ் மற்றும் டேலண்ட்டட் இணைந்து உருவாக்கிய 'அடேங்கப்பா கதைகள் 2.0'முயற்சி, பெற்றோர்–குழந்தை பிணைப்பை கதை சொல்லலின் மூலம் வலுப்படுத்துவதையே முக்கியஇலக்காகக்கொண்டுள்ளது.மேம்படுத்தப்பட்ட செயற்கை நுண்ணறிவு உதவியுடன், தமிழ்நாட்டில் உள்ளகுடும்பங்கள்தங்கள்வீட்டில்இருக்கும்அன்றாடப் பொருட்களை வைத்து வேடிக்கையான கதைகளை எளிதில்உருவாக்கமுடியும்.மில்க்பிக்கிஸ்பாக்கெட்டில் உள்ள குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் தனிப்பட்ட கதைகளை உருவாக்கும் வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

இம்முறை, பெற்றோர்களும் குழந்தைகளும் சேர்ந்து உருவாக்கும் கதைகளை வீடியோவாக பதிவு செய்து பகிரலாம்; சிறந்த பதிவுகளைத் தேர்ந்தெடுத்து வாரந்தோறும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும், மிகச் சிறந்த படைப்புகளுக்குத் ஹாங்காங்குக்கு சுற்றுப்பயணம் செல்லும் வாய்ப்பும் உள்ளது. அறிமுக விழிப்புணர்வு படத்தை வெளியிட்டு, இந்த முயற்சி கதைநேரத்தை மேலும் சுவாரஸ்யமாகவும் உற்சாகமாகவும் மாற்றுகிறது.



### பண்ணந்தூர் இந்திராநகர் கிராமத்தில்

## ஸ்ரீ மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம்; புனித நீர் எடுத்து வந்த பக்தர்கள்!

போச்சம்பள்ளி டிச.01

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த பண்ணந்தூர் ஊராட்சி இந்திராநகர் கிராமத்தில் உள்ள பழமையான ஸ்ரீ மாரியம்மன் கோவில் புதுபிக்கும் பணியானது கடந்த நான்கு ஆண்டுகளாக நடைபெற்றது. இதில் கடந்த மாதம் கோவில் கட்டுமான பணிகள் மற்றும் வனம் தீட்டுதல், கோவிலுக்கு புதியதாக தேர் ஆகிய பணிகள் முடிவடைந்த நிலையில் கோவில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக திருக்குட பெரும் நன்னீராட்டு சாந்தி விழா நாளை காலை 6 மணி முதல் 7.15 மணி வரை மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

இதற்காக தென்பெண்ணை ஆற்றில் இருந்து புனித நீர் எடுத்துவரப்பட்டு மேல தாளங்கள் முழங்க ஊர்வலமாக பண்ணந்தூர்எருதுகட்டுமண்டு, ஊராட்சி மன்ற அலுவலகம், நான்கு வழி சாலை தரும தோப்பு ஆகிய வழியாக கோவிலுக்கு புனித நீரை இந்திராநகர் கிராம மக்கள் மஞ்சள் நிற ஆடையில் விரதமிருந்து எடுத்து வந்தனர். இந்த நிகழ்ச்சியில் இந்திராநகர் கிராம மக்கள் பெருந்திரளானோர் கலந்து கொண்டு தீர்த்த படம் முளைப்பாரி எடுத்துச் சென்றனர். இதனைத் தொடர்ந்து இன்று மாலை மங்கள வாத்தியம் புண்யாவாஹனம், ரக்ஷாபந்தனன், அக்னகாரியத்துடன். மகாபூர்ணாகாதியுடன் முதல் கால பூஜை முடிவுறும் , இதனைத் தொடர்ந்து நாளை காலை இரண்டாம் கால பூஜை நடைபெறும் அதனைத் தொடர்ந்து பண்ணந்தூர் தென்பெண்ணை ஆற்றில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீரை எடுத்து கடகம் புறப்பட்டு ஸ்ரீ மாரியம்மன் கோவில் விமானத்திற்கும் அதனைத் தொடர்ந்து மூலஸ்தானத்திற்கும் புனித நீரானது ஊற்றப்படும். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஸ்ரீ மாரியம்மன் கோவில் திருப்பணிக்குழுவினர் மற்றும் கிராம முக்கியஸ்தர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தனர்.

### மாவட்ட ஆட்சியர் உத்தரவு பிறப்பித்தும்

## சாலை அமைக்காததால் பொதுமக்கள் நாற்று நட்டு போராட்டம்!

ராஜபாளையம் டிச.01

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம் சோழபுரம் ஊராட்சியைச் சேர்ந்து தேசிகாபுரம் கிராமம். இந்த கிராமத்தில்பேவர்பிளாக்சாலை அமைக்க விருதுநகர் மாவட்ட ஆட்சியர் மரு. என்.ஓ. சுகபுத்திரா கடந்த10112025ம் தேதிரூ.3,42,000நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார். உத்தரவின்படி பணிகள் எதுவும் நடைபெறவில்லை. இந்நிலையில் மழை பெய்து மண்ரோடு முழுவதும் குண்டும் குழியுமாக, சேறும், சகதியுமாக இருந்ததால் பொதுமக்கள் மிகவும் அவதிப்பட்டனர். எனவே அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நாற்று நட்டி போராட்டத்தை நடத்தினார்கள். இது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



### புதுக்கோட்டை அருகே

## அரசு மருத்துவமனையில் காசநோய் பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து தொகுப்பு வழங்கும் முகாம்!

புதுக்கோட்டை டிச.01

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள கீரமங்கல ம் அரசு ஆரம்ப சுகாதாரநிலைய மருத்துவமனையில் காசநோய் பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து தொகுப்பு வழங்கும் முகாம் மருத்துவமனை வளாகத்தில் நேற்று.நடைபெற்றது. முகாமிற்கு மருத்துவர் காத்தவராயன் தலைமையில் நடை பெற்றது. மருத்துவர் அய்யப்பன் மாவட்ட ஒருங்கிணைப்பா ளர் .நீரின்றி அமையாது உலகு அமைப்பின்தலைமை ஒருங்கிணைப்பாளர்ராஜேந்திரசேதுபதி ஆகியோர்முன்னிலையில் நடந்தது.

கீரமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி முன்னாள் மாணவர்களின் கூட்டமைப்பான (ஆர்.எம்.கே) நண்பர்கள் குழு சார்பில் காசநோய் பயனர்களுக்கு ஊட்டச்சத்து தொகுப்பு அரசு ஆரம்பசுகாதார நிலையத்தில் வழங்கப்பட்டது.



முகாமில் டாக்டர்கள் சங்கரி துணை இயக்குநர் (காசநோய்) பூபாலன்.பிரவீனா, முகாமில் 50க்கும் மேற்பட்ட பயனாளிகளுக் கு ஊட்டச்சத்து தொகுப்பு வழங்கப்பட்டது.

முகாமில் மருத்து வர் இயலரசன்,ஜீவபாரதி ஆகியோர்களும் கலந்து கொண்டனர்..மருத்துவமனை பணியாளர்கள். பயனாளர்கள் கலந்து கொண்டு முகாமை சிறப்பித்தனர்.

### திருக்கோவிலூர் அருகே

## புதிய பள்ளி கட்டிடம் கட்டுவதில் இருதரப்பினர் இடையே வாக்குவாதம்!

கள்ளக்குறிச்சி டிச.01

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் அருகே உள்ள வடமருதூர் ஊராட்சியில் சுமார் 2000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர்இந்த ஊராட்சியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி நூற்றாண்டை கடந்து செயல்பட்டு வருகிறது.

இந்தக் கட்டிடம் ஆனது பாழடைந்ததால் இந்தக் கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பந்தம் வாங்காத சரவணன் தனது ஆதரவாளர்களுடன் இதை இடித்து புதிய கட்டிடம் கட்டுவது சுமார் 57லட்சம் ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ள உள்ள நிலையில் இன்று அந்த பள்ளி கட்டிடத்தை இடிக்க சரவணன் முற்பட்டபோது மற்றொரு தரப்பினரான தற்போதைய ஊராட்சி மன்ற தலைவர் தனது ஆதரவாளர்களுடன் இந்த ஊராட்சியில் நியாய விலை கடை இல்லாமல் தகர சீட்டில் நியாய விலை கடை செயல்பட்டு வருவதாலும் இதனால் ரேஷன் பொருட்கள் வீணாகி வருகின்ற அவலை ஏற்பட்டு வருகிறது என வும் மேலும் வாங்க வருபவர்களும் அவதிக்குள்ளாகி வருகிறார்கள் எனவும் எனவே எங்களுக்கு நியாய விலை கடை கட்டிய பிறகு பள்ளி கட்டிடத்தை கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என ஒரு தரப்பினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் இரு தரப்பினரிடையேமோதல்ஏற்படுகின்றநிலையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



உடனடியாக அங்கு வந்த திருக்கோவிலூர் காவல் நிலைய போலீசார் இரு தரப்பினர் இடையே பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவும் நியாய விலைக் கட்டிட கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என உறுதி அளித்ததின் பேரில் இரு தரப்பினர் பேச்சுவார்த்தை உடன்பட்டதால் வாக்குவாதத்தில் ஈடுபட்டவர்கள் கைவிட்டு சென்றனர்.

மேலும் ஒரு தரப்பினர் பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் மற்றொரு தரப்பினர் நியாயவிலைக் கடை கட்டிய பிறகு பள்ளி கட்டிடம் கட்ட வேண்டும் என வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் சுமார் 2 மணிநேரத்திற்கு மேலாக பரபரப்பு ஏற்பட்டது.